வனத்துறை

# மக்கள் சாசனம்

2019

**மக்கள் சாசனம் - 2019**

**தமிழ்நாடு வனத்துறை**

சிக்கலான சூழலமைப்புகளைக் கொண்டுள்ள வனங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மிக முக்கிய பங்காற்றி வருகின்றன. வனம் சார்ந்து வாழும் இலட்சக்கணக்கான மக்களுக்கு கணிசமான வருவாயினையும், வாழ்வாதார வழிமுறைகளையும் வனங்கள் வழங்கி வருகின்றன. அவை, பலதரப்பட்ட பொருட்களையும், சேவைகளையும் நல்கி வருகின்றன. வனங்களின் தரம் குன்றுவதால், நீர்வளம், விவசாயம், உயிர்ப்பன்மை மற்றும் சுற்றுச்சூழல் போன்ற பல்வேறு வாழ்வாதார அமைப்புகளின் மீது கடும் தாக்கம் ஏற்படும். பழங்குடியினத்தவர் உள்ளடக்கிய கிராமப்புற சமுதாயத்தின் பெரும்பகுதியினரின் வாழ்வாதாரங்கள் வனங்களை சார்ந்தே உள்ளது. மனித சமுதாயத்தின் வாழ்வாதார பாதுகாப்பிற்காக வனங்களைத் தொடர்ந்து நிலைமாறாத் தன்மையுடன் மேலாண்மை செய்வது இன்றியமையாததாகும்.

வனத்துறை மக்களுக்கு பல்வேறு வகையான சேவைகளை வழங்கி வருகிறது. அவற்றில் சில இனங்கள் பின்வருமாறு :

| வ. எண். | வழங்கப்படும் சேவைகள் | பயன்கள் | தகுதியான நபர்கள் | சமர்ப்பிக்க வேண்டிய ஆவணம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | ஒப்புதல் வழங்கும் அதிகாரி |
|---|---|---|---|---|---|---|
| 1. | தனியார் நிலங்களில் மரம் வளர்ப்புத் திட்டம் (சவுக்கு மற்றும் தடிமரங்கள் வளர்த்தல்) | பலன் தரும் தடிமரங்களை தரிசு நிலங்களில் உற்பத்தி செய்து அவற்றை வளமாக்குதல் | சிறு மற்றும் குறு விவசாயிகள் | நில உரிமை பத்திரம், பட்டா, சிட்டா அடங்கல் | சம்பந்தப்பட்ட வனச் சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |
| 2. | கண்மாய் தோட்டங்கள் (தோட்டங்கள் எழுப்புதல்) | மாநிலத்தின் எரிபொருள், தீவனம் மற்றும் சிறு மரத்தேவையை நிறைவு செய்தல்<br><br>கருவேல் மரத்தோட்ட விற்பனை மூலம் கிடைக்கும் நிகர வருவாயில் 75 விழுக்காட்டினை பங்குத் தொகையாக கிராம மேம்பாட்டுப் பணிகளுக்காக ஊராட்சிகளுக்கு வழங்குதல் | உள்ளூர் கிராம ஊராட்சி உறுப்பினர்கள் | ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய கண்மாய்களில் மட்டும் வளர்த்தல் | சம்பந்தப்பட்ட வனச் சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |
| 3. | கல்வி நிறுவனங்களுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்குதல் | காற்று மற்றும் ஒலி மாசுக்களின் எதிர்விளைவை குறைத்தல் | பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் போன்றவை | வெள்ளைத்தாளில் விண்ணப்பிக்க வேண்டும் | சம்பந்தப்பட்ட வனச் சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |
| 4. | மேய்ச்சல்<br><br>(அரசாணை நிலை எண்.47, சுற்றுச்சூழல் மற்றும் வனத்றை (வனம்–13) நாள் 03.03.2000)<br><br>(அரசாணை எண்.78, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை (வனம்–13), நாள் 08.08.2006) | கால்நடைகள் மேய்ச்சல் | பொது மக்கள் | <u>கட்டண விபரம்</u><br>வெள்ளாடு – அனுமதி இல்லை<br>செம்மறியாடு – அனுமதி இலவசம்<br>காளை – அனுமதி இலவசம்<br>எருமை – அனுமதி இலவசம்<br>கழுதை / குதிரை ஒன்றுக்கு – ரூ.10/– வீதம்<br>யானை ஒன்றுக்கு – ரூ.100/– வீதம் | சம்பந்தப்பட்ட வனச் சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |

| வ. எண். | வழங்கப்படும் சேவைகள் | பயன்கள் | தகுதியான நபர்கள் | சமர்ப்பிக்க வேண்டிய ஆவணம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | ஒப்புதல் வழங்கும் அதிகாரி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| 5. | அட்டவணைப்படுத்தப் பட்ட தடி மரங்களை கையிருப்பு வைக்க | 0.5 கன மீட்டருக்கு குறைவான அளவு தடிமரங்கள் இருப்பில் வைத்துக் கொள்ளலாம் | பொதுமக்கள் | -- | -- | -- |
| | | 0.5 கன மீட்டருக்கு அதிகமான தடிமரங்கள் | பொதுமக்கள் | இருப்பில் வைத்துக்கொள்ள உரிமம் பெற தோற்ற சான்றிதழின் அசலுடன் விண்ணப்பித்தல் வேண்டும். | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |
| 6. | செம்மரம் சில்லறை விற்பனை (அரசாணை எண். 169, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்-4) துறை, நாள் 10.11.2010 | துறை விற்பனையின் மூலம் எந்தவொரு தனி நபருக்கும் 10 டன்னுக்கு மிகாமல் (கடைசி விற்பனையின் அதிக பட்ச விற்பனை விலையைக் காட்டிலும் 10 விழுக்காடு கூடுதலாக) | பொதுமக்கள் / தனி நபர் | வெள்ளைத்தாளில் விண்ணப்பிக்க வேண்டும் | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் |
| 7. | தடிமரப்போக்குவரத்து | அறுவடை செய்யப்பட்ட தடிமரங்கள் போக்குவரத்து<br><br>அரசிதழ் வெளியீடு எண்.41ல் தமிழ்நாடு தடிமரப் போக்குவரத்து விதிகள் 1968லிருந்து 41 இன மரங்களுக்கு விலக்களிக்கப் பட்டுள்ளது.<br><br>அரசாணை எண்.194, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்-13) துறை, நாள் 01.08.2012ல் தமிழ்நாடு தடிமரப் போக்குவரத்து விதிகள், 1968லிருந்து சில்வர் ஓக் மரத்திற்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. (உயர்நீதி மன்ற வழக்கு எண்.27405/2012, நாள் 28.04.2016ல் திரு. ஜெயச்சந்திரன் என்பவரால் | பொதுமக்கள் | வெள்ளைத்தாளில் விண்ணப்பம் செய்யலாம். போக்குவரத்து செய்ய கட்டணம் கருவேல் மரங்களுக்கு ஒரு வண்டி சுமை ரூ.10/-<br>ஒரு லாரி சுமை ரூ.50/- இதர வகைக்கு ரூ.100/- | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |

| வ. எண். | வழங்கப்படும் சேவைகள் | பயன்கள் | தகுதியான நபர்கள் | சமர்ப்பிக்க வேண்டிய ஆவணம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | ஒப்புதல் வழங்கும் அதிகாரி |
|---|---|---|---|---|---|---|
| | | தடையாணை பெறப்பட்டுள்ளது. | | | | |
| 8. | கோயில் நிர்வாகத்தினருக்கு கொடிமரப் பராமரிப்புக்காக சலுவை விலையில் தேக்கு மரங்கள் விநியோகம் | இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் வரும் கோயில் நிர்வாகத்தினருக்கு 70 கன அடி கொடிமரப் பராமரிப்புக்காக விநியோகம்<br>(உயரம் பொருட்படுத்தாமல்) | இந்து சமய அற நிலையத் துறையின் கட்டுப்பாட்டில் வரும் கோயில் நிர்வாகத்தினர் | இந்து சமய அறநிலையத் துறையின் பரிந்துரையுடன் பெறப்படும் விண்ணப்பம் | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் |
| | | 70 கன அடிக்கு மேல் 350 கன அடி வரை கொடிமரப் பராமரிப்புக்காக | இந்து சமய அற நிலையத் துறையின் கட்டுப்பாட்டில் வரும் கோயில் நிர்வாகத்தினர் | இந்து சமய அறநிலையத் துறையின் பரிந்துரையுடன் பெறப்படும் விண்ணப்பம் | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் | தமிழ்நாடு அரசு |
| 9. | சந்தன மரங்கள் இருப்பு வைத்தல் | 5 கிலோவிற்கு அதிகமாக சந்தன மரங்களை சொந்த பயன்பாட்டிற்காக வைத்துக்கொள்ளுதல் | பொதுமக்கள் | வெள்ளைத்தாளில் படிவம்–1 அனுமதி உரிய கட்டணத் தொகை மற்றும் அசல் தோற்றச் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |
| 10. | சந்தன மர விற்பனை | | | 1) தற்போதைய நிலையில் வனத்துறை மூலம் அறுவடை செய்யும் நிலையில் முதிர்வடைந்த சந்தனமரம் ஏதும் இல்லை<br><br>2) தற்போதைய தேதியில் வனத்துறை சந்தனமரக்கிடங்குகளில் 190 மெ.டன் சந்தனமரம் மட்டுமே இருப்பில் உள்ளது. இனிவரும் 40 ஆண்டுகளுக்கு மேற்படி சந்தனமரம் மட்டுமே உபயோகத்திற்கு உள்ளதால், பொது ஏலம் மூலம் சந்தனமரம் விற்பனை ஏதும் வனத்துறை மூலம் நடத்தப்படுவதில்லை. | | |
| 11. | சந்தன மரம் சில்லறை விற்பனை (அரசாணை எண்.37, சுற்றுச்சூழல் மற்றும் வனத்(வனம்–4)துறை, நாள் 10.02.1999) | | தனிநபர் / கோவில் / மருத்துவ நிறுவனங்கள் | 1) அரசாணை(Ms) எண்.17, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள்.20.02.2017–ன் படி சந்தனமரம் சில்லரை விற்பனை தனிநபருக்கு 2 கிலோகிராமாகவும், கோவில்களுக்கு நிறுவனங்களுக்கு 20 கிலோகிராமாகவும் வரையறுக்கப் பட்டுள்ளது.<br>2) சந்தனமரம் வேண்டி கோவில்கள் மூலம் இந்துசமய அறநிலையத்துறை பரிந்துரையுடன் வரப்பெறும் விண்ணப்பங்கள் மற்றும் தனிநபர் / மருந்து நிறுவனங்கள் மூலம் வரப்பெறும் விண்ணப்பங்கள் உரிய பரிசீலனை | | |

| வ. எண். | வழங்கப்படும் சேவைகள் | பயன்கள் | தகுதியான நபர்கள் | சமர்ப்பிக்க வேண்டிய ஆவணம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | ஒப்புதல் வழங்கும் அதிகாரி |
|---|---|---|---|---|---|---|
| | | | | செய்யப்பட்டு, அரசின் ஒப்புதல் வேண்டி உரிய கருத்துரு அரசிற்கு அனுப்பப்பட்டு, அரசாணை பெற்றபின் மனதாரர்களுக்கு சந்தனமரம் விநியோகம் செய்யப்படும். | | |
| 12. | சந்தன மர இடமாற்றம் செய்தல் | சந்தன மரங்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல் மற்றும் மாநிலத்திற்குள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடமாற்றம் செய்தல் | பொதுமக்கள் | வெள்ளைத்தாளில் படிவம்–1, 2 மற்றும் 3 அனுமதிச்சீட்டு பெற உரிய கட்டணம் மற்றும் அசல் தோற்ற சான்றிதழுடன் விண்ணப்பிக்க வேண்டும். | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |
| 13. | வன மேலாண்மை நீர்ப்பிடிப்பு பகுதிகளிலுள்ள சிறுவனப் பொருட்கள் | தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டக் கிராமங்களிலுள்ள வனப்பகுதிகளில் உள்ள சிறுவனப் பொருட்கள் சேகரம் செய்தல் | கிராம வனக்குழுக்கள்<br><br>விற்பனையில் கிடைத்த தொகையில் 25 விழுக்காடு கிராம வன வளர்ச்சி நிதியில் சேர்க்கப் பட்டு, மீதத்தொகை கிராம வனக்குழு உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப் படுகிறது.<br><br>கிராம வனக்குழு நிர்ணயித்த நியாய விலையின் அடிப்படையில் சிறுவனப் பொருட்களை கிராம பெண் குழுக்களுக்கு ஒதுக்கீடு செய்யப் படுகிறது. | –– | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |

| வ. எண். | வழங்கப்படும் சேவைகள் | பயன்கள் | தகுதியான நபர்கள் | சமர்ப்பிக்க வேண்டிய ஆவணம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | ஒப்புதல் வழங்கும் அதிகாரி |
|---|---|---|---|---|---|---|
| | | | (அரசாணை எண். 286, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள் 25.09.1998) | | | |
| | பாதுகாக்கப்பட்ட பகுதியில் இருந்து சேகரிக்கப்பட்ட வன வளங்கள் மற்றும் சூழல் சுற்றுலா. | மரங்கள் அல்லது காடுகளில் கிடைக்கும் பொருட்கள், சிறிய மரத்துண்டுகள், எரிபொருளுக்காக சேகரிக்கப்படும் விறகுகள், சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்குரிய பணிகள் | சரணாலய பகுதி மற்றும் அதனை சுற்றி உள்ள பழங்குடியினர். | வணிக மற்றும் வர்த்தக நோக்கமற்ற அடையாள சான்றிதழ் | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் / வன உயிரினக் காப்பாளர் / மாவட்ட வன அலுவலர் | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் (வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972, 29ஆம் விதியின் படி) |
| 14. | வன மேலாண்மை நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலுள்ள விறகு மற்றும் எரிபொருள் சேகரம் | தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்ட கிராமங்களில் இலவசமாக விறகு மற்றும் எரிபொருள் சேகரம் செய்யலாம். கட்டணம் ஏதுமில்லை. | கிராம வனக் குழுக்களிலுள்ள நிலமில்லாதவர்கள் மற்றும் ஏழைக் குடும்பத்தினர் | –– | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |
| 15. | தீவனம் மற்றும் பசுந்தாள் உரம் | தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டக் கிராமங்களில் உள்ள மக்கள் இலவசமாக தீவனம் மற்றும் பசுந்தாள் உரம் சேகரம் செய்ய அனுமதிக்கப்படுவர். | கிராம வனக்குழு உறுப்பினர்கள் | –– | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |
| 16. | சிறுவனப்பொருட்கள் பழங்குடியினருக்கு வழங்குதல் (அரசாணை எண்.79, சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை, நாள் 29.04.2003) | பழங்குடியின மக்களுக்கு இலவசம் | பழங்குடியினத்தவர் | வெள்ளைத்தாளில் விண்ணப்பிக்க வேண்டும். | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் |
| 17. | படப்பிடிப்பு | முக்கியமில்லாத காப்புக்காட்டுப் பகுதிகளில் படப்பிடிப்புகள் | மாணவர்கள்ஆவணப் படம், கலை மற்றும் | வெள்ளைத்தாளில் விண்ணப்பிக்க வேண்டும். | தடையில்லா சான்று பெற முதன்மை | செய்தி மற்றும் விளம்பரத்துறை |

| வ. எண். | வழங்கப்படும் சேவைகள் | பயன்கள் | தகுதியான நபர்கள் | சமர்ப்பிக்க வேண்டிய ஆவணம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | ஒப்புதல் வழங்கும் அதிகாரி |
|---|---|---|---|---|---|---|
| | | | பண்பாட்டுத் திரைப் படங்கள் எடுக்க சுற்றுலாத்துறை மற்றும் திரைப்படத் துறை மூலம் அணுக வேண்டும். | | தலைமை வனப்பாதுகாவலரிடம் விண்ணப்பிக்க வேண்டும். பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளுக்கு தடையில்லா சான்று பெற முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளரின் அனுமதி பெறவேண்டும். | இயக்குநர் |
| 18. | வன உயிரினங்கள் வைத்திருத்தல் | வன உயிரினங்களையோ அல்லது வன உயிரினங்களால் செய்த பொருட்களையோ முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக்காப்பாளர் அவர்களின் முன் அனுமதியின்றி மக்கள் தங்களிடம் வைத்திருக்கக் கூடாது. | -- | -- | -- | -- |
| 19. | வன உயிரின இடமாற்றம் (அரசாணை எண்.447, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்–7) துறை, நாள் 19.07.1991) | எந்தவொரு நபரும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளரின் முன் அனுமதியின்றி எந்தவொரு வன உயிரினத்தையும் மாநிலத்திற்குள் அல்லது மாநிலத்திற்கு வெளியே இடமாற்றம் செய்ய இயலாது. | பொதுமக்கள் | நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் |
| 20. | வன உயிரின வேட்டை | வன உயிரினங்களை வேட்டையாடுவது முற்றிலுமாக | -- | -- | -- | -- |

| வ. எண். | வழங்கப்படும் சேவைகள் | பயன்கள் | தகுதியான நபர்கள் | சமர்ப்பிக்க வேண்டிய ஆவணம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | ஒப்புதல் வழங்கும் அதிகாரி |
|---|---|---|---|---|---|---|
| | | தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் சில தவிர்க்க முடியாத காரணங்களுக்காக முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் வன உயிரினங்களை வேட்டையாடுவதற்கு அனுமதி வழங்க வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972, விதி எண்.11 மற்றும் 12–ன்படி அதிகாரம் உள்ளது. | | | | |
| **21.** | வன உயிரினங்களால் ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீடு வழங்குதல் **(அரசாணை நிலை எண்.141, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள் 25.11.2016)** | 1. **மனித உயிரிழப்பு / நிரந்தர ஊனம் – ரூ.4,00,000/–**<br>2. **பலத்த காயம் – ரூ. 59,100/–**<br>3. **பயிர்சேதம் – ஏக்கருக்கு ரூ.25,000/–** அல்லது உண்மை மதிப்பு இதில் எது குறைவோ அது. தென்னை மரம் ஒன்றுக்கு **ரூ.500/–**<br>4. **ஓடு, கான்கிரீட், கூரை வேய்ந்த வீடுகள் சேதம்**<br><u>முழுமையான குடியிருப்பு சேதம்</u><br>உறுதியான கட்டட சேதம் **ரூ.95,100/–** குடியிருப்பு ஒன்றுக்கு<br><br><u>உறுதியற்ற கட்டட சேதம்</u><br>**ரூ.10,000/–** குடியிருப்பு ஒன்றுக்கு<br><br><u>கடுமையான குடியிருப்பு சேதம்</u><br>உறுதியான கட்டட சேதம் **ரூ.95,100/–** குடியிருப்பு ஒன்றுக்கு<br>உறுதியற்ற கட்டட சேதம் – **ரூ.5,000/–** குடியிருப்பு ஒன்றுக்கு | பாதிப்பிற்குள்ளாகும் மக்கள் | முதல் தகவல் அறிக்கை, வாரிசு சான்றிதழ் மற்றும் இதர தொடர்புடைய ஆவணங்கள் | சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலர் | தொடர்புடைய மண்டல வனப்பாதுகாவலர் |

| வ. எண். | வழங்கப்படும் சேவைகள் | பயன்கள் | தகுதியான நபர்கள் | சமர்ப்பிக்க வேண்டிய ஆவணம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | ஒப்புதல் வழங்கும் அதிகாரி |
|---|---|---|---|---|---|---|
| | | <u>பாதியளவிலான குடியிருப்பு சேதம்</u><br>குடியிருப்பு ஒன்று ரூ.5,200/–<br><br>**5. வாகனம், மாடு மற்றும் இதர கால்நடை இழப்புகளுக்கு**<br>கறவை மாடு ஒன்றுக்கு ரூ.30,000/–<br>எருது ஒன்றுக்கு ரூ.25,000/–<br>வெள்ளாடு ஒன்றுக்கு ரூ. 3,000/–<br>செம்மறியாடு ஒன்றுக்கு ரூ. 3,000/–<br>வீட்டுப்பறவைகள் ஒன்றுக்கு ரூ.100/–<br>பன்றி ஒன்றுக்கு ரூ.3,000/– அல்லது உண்மை மதிப்பில் எது குறைவோ அது<br><br>**6. துணி மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் சேதாரம்**<br>ரூ.2,000/– அல்லது உண்மை மதிப்பில் எது குறைவோ அது<br>**7. கடை சேதாரம்** ரூ.4,000/–<br>**8. பாசன மற்றும் குடிநீர் கிணறு மின்மோட்டார் சேதம்** ரூ.2,000/–<br>**9. வாகன சேதம்** – ரூ.2,000/– | | | | |
| 22 | வன உயிரின சரணாலயத்தை பார்வையிடுதல் | சூழல் சுற்றுலா மூலம் வன உயிரினங்களுக்கு பெரிய அளவில் தாக்கம் ஏற்படாதவாறு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | சுற்றுலா பயணிகள், மாணவர்கள், இந்திய குடியுரிமை பெற்றவர்கள் | –– | சம்பந்தப்பட்ட வன உயிரினக் காப்பாளர் / மாவட்ட வன அலுவலர் | –– |
| 23 | புலிகள் காப்பகத்தை பார்வையிடுதல் | சூழல் சுற்றுலா மூலம் வன உயிரினங்களுக்கு பெரிய அளவில் தாக்கம் ஏற்படாதவாறு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | சுற்றுலா பயணிகள், மாணவர்கள், இந்திய குடியுரிமை பெற்றவர்கள் | தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணைய நெறிமுறைகள் படி | சம்பந்தப்பட்ட தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர் | –– |
| 24 | ஆராய்ச்சிக்கல்வி | மாணவர்கள், நிறுவனங்கள் மற்றும் | மாணவர்கள், | தமிழ் நாடு வனத் துறையின் | தலைமை | வனப்பகுதிகளுக்கு |

| வ. எண். | வழங்கப்படும் சேவைகள் | பயன்கள் | தகுதியான நபர்கள் | சமர்ப்பிக்க வேண்டிய ஆவணம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | ஒப்புதல் வழங்கும் அதிகாரி |
|---|---|---|---|---|---|---|
| | | அறிஞர்களால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி மற்றும் அதன் சார்ந்த கல்வி | நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் | வலைதளத்தில் https://www.forests.tn.gov.in குறிப்பிட்ட படிவத்தில் மனு | வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர் / தலைமை வனப் பாதுகாவலர் / மாவட்ட வன அலுவலர் / வன உயிரினக் காப்பாளர் / துணை வனப்பாதுகாவலர் | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளுக்கு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் |
| 25 | தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரினப் பகுதிகளில் மலையேற்றத்திற்கான (ஒழுங்குமுறை) விதிகள், 2018 (அரசாணை (டி) எண்.296, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்–14) துறை, நாள் 12.10.2018) | காப்புக்காடுகள் மற்றும் வன உயிரினப்பகுதிகளில் மலையேற்றத்தினை ஒழுங்குபடுத்துதல் | மாணவர்கள், மலையேற்றம் செய்பவர்கள், சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் | உரிய படிவத்தில் விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும். மலையேற்றத்திற்கான உரிய கட்டணம் எளிதான பாதைக்கு ரூ.200/–ம், மிதமான பாதைக்கு ரூ.350/–ம், கடினமான பாதைக்கு ரூ.500/–ம் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு செலுத்த வேண்டும். வெளிநாட்டவர்க்கு மேற்கண்ட கட்டணங்கள் முறையே ரூ.1,500/–, ரூ.3,000/– மற்றும் ரூ.5,000/– என வசூலிக்கப்படும். | மாவட்ட வன அலுவலர், வன உயிரினக் காப்பாளர்கள் / துணை இயக்குநர்கள் | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் |
| 26 | தமிழ்நாடு சூழல்சார் சுற்றுலாக் கொள்கை–2017 அரசாணை (நிலை) எண். 87, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்–5) துறை, நாள் 28.06.2018 | வன வளத்தினைப் பாதுகாக்கவும், வனப்பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற மலைவாழ் மக்களுடைய இயற்கை சார்ந்த வாழ்க்கை முறையினை தற்கால சந்ததியினருக்கு மற்றும் மாணவர்களுக்கு கொண்டு சேர்க்கும் வகையிலும் உள்ளூர் | –– | –– | உறுப்பினர் செயலர், சூழல்சார் சுற்றுலா வாரியம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை சென்னை–15 | தலைவர் / முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர், சூழல்சார் சுற்றுலா வாரியம், பனகல் |

| வ. எண். | வழங்கப்படும் சேவைகள் | பயன்கள் | தகுதியான நபர்கள் | சமர்ப்பிக்க வேண்டிய ஆவணம் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | ஒப்புதல் வழங்கும் அதிகாரி |
|---|---|---|---|---|---|---|
| | | மக்களை இயற்கை சுற்றுலா திட்டத்தில் முழுமையாக பங்கேற்க செய்து அவர்களது வேலை வாய்ப்பை பெருக்குவதுடன் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு வகை செய்தல் | | | | மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை–15. |

வனத்துறை பொது மக்களுக்கு சேவைகளை வழங்கி வரும் நிலையில், கீழ்க்காணும் விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் பொதுமக்கள் பின்பற்றுவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

## 2. தடிமரம் போக்குவரத்து

**2.1.** தமிழ்நாட்டில் மரங்களை வெட்டுதல் மற்றும் மரப்போக்குவரத்து போன்றவை பின்வரும் சட்டங்கள் மற்றும் விதிகளின் வாயிலாக முறைப்படுத்தப்படுகின்றன.

- தமிழ்நாடு வனச்சட்டம், 1882.
- தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச்சட்டம், 1949.
- தமிழ்நாடு மலைப்பகுதி (மரங்கள் பாதுகாப்பு) சட்டம், 1955.
- தமிழ்நாடு ஈட்டி (Rosewood) மரங்கள் (பாதுகாப்பு) சட்டம், 1994.
- தமிழ்நாடு தடிமரப்போக்குவரத்து விதிகள், 1968.
- தமிழ்நாடு சந்தன மரப்போக்குவரத்து விதிகள், 1967.
- தமிழ்நாடு சந்தனமர இருப்பு வைத்தல் விதிகள், 1970.
- தமிழ்நாடு பட்டா நில சந்தன மரங்கள் விதிகள், 2008.
- தமிழ்நாடு தொழிற்சாலை / வணிக நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படும் அட்டவணைப் படுத்தப்பட்ட மரங்களுக்கான கணக்குகள் பராமரிப்பு விதிகள் 1988.

**2.2.** தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்பு சட்டம், 1949 மற்றும் தமிழ்நாடு மலைப்பகுதி (மரங்கள் பாதுகாப்பு) சட்டம், 1955ன் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில், எந்தவொரு மரத்தினையும் வெட்ட அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவிடம் முன் அனுமதி பெறவேண்டும். இப்பகுதிகளில் மரங்களை வெட்டுவதற்கான மனுக்கள் மீது குழு முடிவு செய்யும். இக்குழு தேவைக்கேற்ப, அவ்வப்போது அல்லது இரண்டு மாதங்களுக்கு மிகாத இடைவெளியில் கூடி முடிவு செய்யும்.

**2.3.** உச்சநீதிமன்ற வழக்கு எண். 202/95ல், 12.12.1996 நாளிட்ட இடைக்கால ஆணையின் படி வனப்பகுதிகளில் இயற்கையாக வளரும் மரங்களை வெட்ட தடை விதிக்கப்பட்டுள்ளது.

**2.4.** தமிழ்நாடு வனச்சட்டம், **1882**ன் படி பின்வரும் மர இனங்கள் அட்டவணைப் படுத்தப்பட்ட மரங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளன.

1) கருங்காலி (எபோனி),

2) செம்மரம்

3) ஈட்டி மரம்

4) சந்தனமரம்

5) தேக்கு மரம்

**2.5.** தமிழ்நாடு ஈட்டி மரங்கள் (பாதுகாப்பு) சட்டம்–**1994**ன் படி, தரிசு நிலங்கள் அல்லது மரங்கள் மற்றும் புதர்கள் மற்றும் சாலைகள் அமைந்துள்ள சமுதாய நிலங்கள், அரசினால் வனம் என்று அறிவிக்கப்பட்ட மேய்ச்சல் நிலம் மற்றும் எந்தவொரு வகையான நிலத்தினை உள்ளடக்கிய வனப்பகுதிகளிலிருந்து காய்ந்த மற்றும் காற்றில் விழுந்த ஈட்டி மரத்தை வெட்டி அப்புறப்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவரின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

**2.6.** தமிழ்நாட்டில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு தடி மரங்களை கொண்டு செல்ல, வனத்துறையால் வழங்கப்பட்ட படிவம் 2 அனுமதிச்சீட்டு பெறப்படவேண்டும். அனுமதிச்சீட்டு வழங்கு அலுவலரால் அனுமதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் கால அளவு வரை மட்டுமே இந்த அனுமதிச்சீட்டு செல்லத்தக்கது. நகராட்சி மற்றும் மாநகராட்சி எல்லைக்குள் தடிமரப் போக்குவரத்திற்கு அனுமதிச்சீட்டு தேவையில்லை. தமிழ்நாடு தடிமரப் போக்குவரத்து விதிகளிலிருந்து பின்வரும் மர வகைகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளதால், இம்மர வகைகளின் போக்குவரத்துக்கு அனுமதிச்சீட்டு தேவையில்லை.

1) சிறிய அளவிலான தலைச்சுமை அளவிலான விறகு மற்றும் மூங்கில்,

2) வீட்டு உபயோகத்திற்காக மரக்கிடங்கு/ சந்தையிலிருந்து வாங்கப்படும் விறகு மரங்கள்

தமிழ்நாடு மரப்போக்குவரத்து விதிகளின்படி, அனுமதிச்சீட்டு பெற விலக்களிக்கப் பட்ட மர வகைகளின் பெயர்களடங்கிய பட்டியல் https://www.forests.tn.gov.in என்ற வனத்துறையின் இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

2.7. கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை தாலுக்காவிலும், மேலும் மாநிலத்தின் இதர பகுதிகளிலும் தேக்கு மற்றும் ஈட்டி மரங்களுக்கு உரிமைத்தொகை வழங்கத்தேவையில்லை.

வனச்சாலைகளை பொதுமக்கள் தடையின்றி பயன்படுத்த, தணிக்கைச்சாவடிகளில் சாலை அனுமதிக் கட்டணங்கள் வசூலிப்பது ரத்து செய்யப்பட்டுள்ளது.

**2.8. சந்தன மர விற்பனை, உடைமை மற்றும் போக்குவரத்து**

தமிழ்நாட்டின் கிழக்குத் தொடர்ச்சி மலையில் வடகிழக்குப் பகுதியில் வேலூர் மாவட்டத்தில் தொடங்கி, மேற்கே நீலகிரி மாவட்டத்திலுள்ள உலர் இலையுதிர் காடுகள் வரை சந்தன மரங்கள் பெரும்பாலும் பரவலாக வளருகின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை, பட்டுப்போன மற்றும் காய்ந்து வரும் சந்தன மரங்கள் மட்டும் பெயர்த்தெடுக்கப்பட்டு, மேல் துலக்கம் மற்றும் இறுதித் துலக்கம் செய்வதற்காக கிடங்கிற்கு கொண்டு வரப்படுகின்றன.

தமிழ்நாடு சந்தன மரப்போக்குவரத்து விதிகள், 1967 மற்றும் தமிழ்நாடு சந்தன மர இருப்பு வைத்தல் விதிகள், 1970ன் கீழ் தமிழ்நாட்டில் சந்தன மர இருப்பு வைத்தல் மற்றும் போக்குவரத்து முறைப்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு சந்தன மர இருப்பு வைத்தல் விதி, 1970 விதி 3(1)ன் படி, 5 கிலோவுக்கும் அதிகமாக ஒருநபர் சந்தனக்கட்டைகளை இருப்பில் வைத்துக்கொள்ள விரும்பினால், மாவட்ட வன அலுவலருக்கு படிவம்–1ல் மனு செய்து அதற்கான தொகையை விதி 4, துணை விதி (7)ல் குறிப்பிட்டுள்ளபடி செலுத்திய பின் உரிமத்தினைப் பெறலாம்.

தமிழ்நாடு சந்தன மரப்போக்குவரத்து விதி, 1967ன்படி, விதி–4ல் கண்ட படிவம்–1 அல்லது படிவம்–2ல் அனுமதிச்சீட்டு அல்லது விதி–6ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவம் 3 வழி அனுமதிச்சீட்டு பெறாமல், எந்தவொரு நபரும் சந்தன மரங்களை இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யவோ அல்லது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லவோ இயலாது. மேற்படி சந்தனக்கட்டைகளுக்கு சொத்து முத்திரை விதி–7ல் உள்ளபடி அரசின் முத்திரை பதிக்கப்பட வேண்டும்.

உரிய கட்டணத்தினை பெற்ற பின், வனத்துறை மேற்குறிப்பிட்ட அனுமதிச் சீட்டுகளை வழங்குகின்றன.

## 2.9. பட்டாநிலங்களில் சந்தன மரங்கள்

பட்டாநிலத்தில் சொந்தக்காரராக, வாடகையாளராக, ஒப்பந்தக்காரராக மற்றும் அடமானம் வைக்கப்பட்ட நிலத்தில் அல்லது வேறுவழியில், எவரொருவர் சந்தன மரங்களை வளர்க்கிறாரோ அவரே அம்மரங்களுக்கு உரிமையாளராவார். பட்டா நிலங்களில் வளர்க்கப்படும் சந்தன மரங்கள் அரசுக்கு மட்டுமே விற்பனை செய்யப்படவேண்டும். தனியர் தமது சொந்த நிலங்களில் சந்தன மரங்களை அதிக அளவில் வளர்ப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு பட்டா நிலங்களில் சந்தன மரங்கள் விதியினை அரசு தனியே அறிவிக்கை செய்துள்ளது. (அரசாணை (நிலை) எண்.140, சுற்றுச்சூழல் வனத்(வனம்.4) துறை, நாள் 27.11.2018)

## 2.10 தடி மர விற்பனை

தமிழ்நாட்டில் தடிமரங்களின் தேவைக்காக இயற்கை வனங்களில் உள்ள மரங்கள் வெட்டப்படுவதில்லை. எனினும், பட்டுப்போன, காற்றில் விழுந்த மரங்கள் வன மரக்கிடங்கிற்கு அனுப்பப்பட்டு, பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், விழுப்புரம் மாவட்டங்களில் கால்வாய்க்கரைகளில் வளர்க்கப்பட்ட 30 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ள தோட்டங்களில் உள்ள தேக்கு மரங்கள் பெயர்த்தெடுக்கப் பட்டு, ஏலத்தில் விற்பனை செய்யப்படுகிறது. கொடைக்கானல் கோட்டம் மற்றும் நீலகிரி மாவட்ட வனப்பகுதிகளில் வளர்க்கப்பட்டுள்ள முதிர்ச்சியடைந்த கூழ்மரத் தோட்டங்கள், அந்தந்த வனக்கோட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட வனச்செயல் திட்டத்திலுள்ள வரைமுறைகளுக்குட்பட்டு கூழ்மரத் தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## 2.11. வெளிமாநிலங்களுக்கு தடிமரங்கள் எடுத்துச்செல்ல விதிக்கப்பட்ட தடை நீக்குதல்

தமிழ்நாட்டிற்கு வெளியே தடிமரத்தினை வெளிமாநிலங்களுக்கு எடுத்துச்செல்ல விதிக்கப்பட்ட தடையினை அரசு நீக்கியுள்ளது. எனவே எந்தவொரு நபரும் தமிழ்நாடு தடிமரப் போக்குவரத்து விதிகளின்படி உரிய அனுமதிச்சீட்டு பெற்று தடிமரங்களை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லலாம்.. அரசாணை எண் 81 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள் 28.3.2018ன் படி தமிழ்நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்கு கூழ்மரத்தினை எடுத்துச் செல்ல விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்பட்டுள்ளது. மேலும் அரசிதழ் எண்.353, நாள் 13.10.2018ன் படி அனைத்து வகையான மூங்கில்களும் போக்குவரத்து அனுமதி பெறுவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது.

**2.12. உயிர்ப்பன்மை சட்டம், 2002**

1992ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் நாள், ரியோ–டி–ஜெனிரோவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் உயிர்ப்பன்மை மாநாட்டில் வழங்கிய உறுதிமொழியின் அடிப்படையில் நாடாளுமன்றத்தினால் உயிர்ப்பன்மை சட்டம், 2002 இயற்றப்பட்டது. உயிர்ப்பன்மை பாதுகாப்பு, அதன் நிலையான பயன்கள், மரபியல் வளங்களின் பயன்களிலிருந்து கிடைக்கும் பலன்களை நியாயமாகவும், சரியாகவும் பங்கீடு செய்வதே இச்சட்டத்தின் முக்கியமான குறிக்கோளாகும்.

இச்சட்டத்தின் சிறப்பியல்புகள்,

(1) பிரிவு (3)ன் படி, இந்தியாவில் காணப்படும் ஏதேனும் உயிரியல் வளங்களுக்கோ அல்லது அவ்வளங்கள் தொடர்பான புலமைக்கோ அல்லது வணிக பயன்பாட்டிற்கோ அல்லது உயிர் அளவை மற்றும் உயிர்பயன்பாட்டிற்கோ தேசிய பல்லுயிர்ப்பன்மை ஆணையத்தின் முன் ஒப்புதல் பெறப்படவேண்டும்.

(2) பிரிவு (58)ன் படி, இச்சட்டத்தின் கீழ் வரும் அனைத்துக் குற்றங்களும் பிடியாணையின்றி கைது செய்வதற்குரியதும், பிணையில் விடத்தகாததும் ஆகும்.

(3) பிரிவு (53)ன் படி, இச்சட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ஐந்தாண்டுகள் சிறைத் தண்டனையோ, அல்லது ரூ.10 லட்சம் வரை அபராதம் விதித்தோ தண்டனை வழங்கப்படும்.

தமிழ்நாடு உயிர்ப்பன்மை விதி 2017, அரசாணை (நிலை) எண்.137, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள் 09.11.2017–ல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த விதி 06.12.2017–ல் அரசிதழில் வெளியிடப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளது.

**2.13. தமிழ்நாடு மர அறுவை ஆலைகள் ஒழுங்குமுறை விதிகள், 2010**

மர அறுவை ஆலைகள் இயங்குவதை ஒழுங்குமுறைப்படுத்துவதே இதன் நோக்கமாகும். உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில் இந்த விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. உச்சநீதிமன்றம் தனது நீதிப்பேராணை எண்.276, நாள் 29.10.2002ல் தனது தீர்ப்பில் நாட்டிலுள்ள அனைத்து உரிமம் பெறாத மர அறுவை ஆலைகளையும் மூடுமாறு ஆணையிட்டது. மேலும், மர அறுவை ஆலைகள் இயங்க உரிமம் வழங்குவதற்கு முன் உச்சநீதிமன்றத்தினால் அமைக்கப் பட்ட மத்திய அதிகாரக்குழுவின் முன் அனுமதி பெறுவது அவசியம் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இவ்விதிகளின் படி, மர அறுவை ஆலைகளுக்கு உரிமம் வழங்கும் அதிகாரம் படைத்த அலுவலர் மாவட்ட வன அலுவலர் / வன உயிரினக் காப்பாளர் / புலிகள் காப்பகத்தின் துணை இயக்குநர் ஆவார்கள். மேலும், எந்தவொரு வனப்பகுதியின் எல்லையிலிருந்தும் 2 கி.மீ. தூரத்திற்குள் புதிய மரம் சார்ந்த தொழிற்சாலைகள் அமைக்க உரிமம் வழங்கப்பட மாட்டாது. இவ்வுரிமம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு செல்லத்தக்கது. மத்திய அதிகாரக்குழுவின் அனுமதி பெற்ற பின்னரே உரிமம் வழங்கும் அதிகாரி அனுமதி வழங்குவார்.

**3. வனப்பாதுகாப்புச்சட்டம்–1980**

வனங்களை பாதுகாப்பது தொடர்பாகவும் வனம் தொடர்பான இதர பொருட்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் இந்திய அரசினால் வனப் (பாதுகாப்பு)ச் சட்டம் 1980 கொண்டு வரப்பட்டு 25.10.1980 முதல் அமலாக்கப்பட்டது.

வனநில மாற்றம் கோரும் கருத்துருக்கள் சம்பந்தப்பட்ட தொடர்பு துறையினர் / பயனீட்டாளரால் முதன்மை தலைமை வனப்பாதுகாவலருக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட வேண்டும். வனப்பாதுகாப்பு சட்டம் மற்றும் பிற சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு கருத்துருக்கள் பரிசீலனை செய்யப்பட்டு இந்திய அரசு / தமிழக அரசின் அங்கீகாரம் பெறப்பட்டு வனநில பயன்பாட்டிற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் வனநில மாறுதல்கள் அரசு துறைகளால் மேற்கொள்ளப்படும் பல்வேறு அரசு சார்ந்த சமூக நலப் பணிகளுக்காக மட்டுமே பெருமளவில் வனநிலம் மாற்றம் செய்யப் பட்டுள்ளது.

மத்திய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் (வனப்பாதுகாப்பு கோட்டம்), புதுடெல்லி கடித எண்.11–232/2014 FC(Pt) நாள் 24.7.2014ல் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி 15.8.2014 முதல், வனநில மாற்றங்களுக்கான கருத்துருக்கள் மற்றும் வனநில குத்தகை புதுப்பித்தல் கருத்துருக்கள் மத்திய அரசினால் வடிவமைக்கப்பட்டுள்ள இணையதளத்தின் (www.forestclearance.nic.in) வழியாக மட்டுமே பெற்றுக் கொள்ளப் படும். மாவட்ட வன அலுவலர்கள் / வனப்பாதுகாவலர்கள் ஆகியோருக்கு இந்த வழிமுறை தொடர்பாக பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. அரசு துறைகள் / பயனீட்டாளர்கள் கருத்துரு தொடர்பாக தொடர்பு கொள்ளும்போது வழிகாட்டுதல்கள் தொடர்பாக உரிய உதவிகள் / வழிகாட்டுதல்களை தெரிவித்திட கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**வனப்பாதுகாப்புச் சட்டம் 1980 ன் கீழ் ஒப்புதல் வழங்க பின்பற்ற வேண்டிய நிலைகள்.**

**<u>முதல் நிலை ஒப்புதல் (Stage I approval)</u>**

1. பயனீட்டாளரால் அனைத்து உரிய விவரங்கள்/சான்றிதழ்கள்/உறுதி சான்றிதழ் ஆகியவற்றுடன் இணையதளம் மூலம் கருத்துரு அனுப்பப்படவேண்டும்.

2. கருத்துரு அனைத்து விவரங்களுடன் முழு வடிவில் கிடைக்கப் பெற்றப்பின் இவை உரிய மாவட்ட வன அலுவலருக்கு மேல் நடவடிக்கையின் பொருட்டு வனப் பாதுகாப்புச் சட்ட ஒருங்கிணைப்பு அலுவலரால் அனுப்பப்படும்.

3. வன நிலம் தவிர வேறு நிலம் இப்பணிக்கு இல்லை என்ற சான்றிதழ் மற்றும் பழங்குடியினர் மற்றும் இதர மரபுவழி வாழ்வினர் (வன உரிமைகள் அங்கீகரிப்பு) சட்டம் 2006 குறித்த சான்றிதழ் ஆகியவை மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெற்று பயனீட்டாளரால் அளிக்கப்பட வேண்டும்.

4. மாவட்ட வன அலுவலரால் களத் தணிக்கை மேற்கொண்டு அதனை பதிவு செய்து உரிய படிவத்தில் அனைத்து விவரங்களுடன் கருத்துரு வனப்பாதுகாவலருக்கு பரிந்துரை செய்யப்படும்.

5. வனப்பாதுகாவலரால் அவரது பரிந்துரையுடன் வனப்பாதுகாப்புச் சட்ட ஒருங்கிணைப்பு அலுவலருக்கு (Nodal Officer) கருத்துரு அனுப்பப்படும்.

6. முதன்மை தலைமை வனப்பாதுகாவலரால் (துறைத் தலைவர்) வனப் பாதுகாப்புச் சட்ட ஒருங்கிணைப்பு அலுவலரின் பரிந்துரையுடன் மாநில அரசுக்கு கருத்துரு அனுப்பப்படும்.

7. மாநில அரசின் பரிந்துரையுடன் மைய அரசின் வனம், சுற்றுச்சூழல் மற்றும் பருவ நிலை மாற்றம் (தென் மண்டலம்), சென்னை அலுவலகத்திற்கு கருத்துரு அனுப்பப்படும். கருத்துரு 40 எக்டேருக்கு குறைவாக இருப்பின் இவை மைய அரசின் சென்னை மண்டல அலுவலகத்தில் ஆய்வு செய்யப்படும். கருத்துரு 40 எக்டேருக்கு அதிகமாக இருப்பின் மைய அரசின் வனம், சுற்றுச்சூழல் மற்றும் பருவ நிலை மாற்றம் துறை, புது டெல்லிக்கு அனுப்பப்படும்.

8. மாற்றம் செய்யப்படும் வன நிலப்பரப்பு 5 எக்டேருக்கு குறைவாக இருப்பின் மைய அரசின் தென்மண்டலம், சென்னை அலுவலகத்தில் முதல் நிலை அனுமதி வழங்கப்படும். 5 எக்டேருக்கு மேற்பட்ட கருத்துருக்கள் மண்டல அளவில் அமைக்கப்பட்ட குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு முதல் நிலை அனுமதி மைய அரசின் (தென் மண்டலம்) சென்னை அலுவலகத்தில் வழங்கப்படும்.

**வனநிலம் வனமற்ற பிற பணிகளுக்கு உபயோகப்படுத்தும் போது பொதுவாக பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள்:**

அ) பயனீட்டாளர் ஒதுக்கீடு செய்யும் வன நிலத்திற்கு பதிலாக வழங்கப்படும் ஈட்டு நிலம் இருமடங்கு அளவில் வனத்துறைக்கு ஒப்படைத்து, வனம் என வருவாய் துறை பதிவேட்டில் மாற்றம் செய்து வழங்கப்பட வேண்டும்.

ஆ) வன ஈட்டு நிலத்தில் தோட்டம் வளர்க்க ஆகும் தொகையினை பயனீட்டாளரால் செலுத்தப்பட வேண்டும்.

இ) மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கு எண்.202/95ல் வழங்கியுள்ள ஆணையின்படி மாற்றம் செய்யப்படும் வன நிலத்தின் நிகர மதிப்பு தொகையினை பயனீட்டாளரால் செலுத்தப்பட வேண்டும்.

ஈ) பயனீட்டாளர் ஒதுக்கீடு செய்யும் வனநிலத்தில் 20மீ. இடைவெளியில் கற்தூண்கள் நட்டு அந்த இடத்தின் GPS அளவீடு அளிக்கப்பட வேண்டும்.

உ) மாண்புமிகு உச்சநீதி மன்ற இறுதி முடிவுக்கு உட்பட்டு தேவைப்படும் வன நிலத்தின் கூடுதல் நிகர மதிப்பு தொகையை செலுத்த பயனீட்டாளர் உறுதி செய்ய வேண்டும்.

ஊ) பயனீட்டாளருக்கு ஒதுக்கீடு செய்ய உத்தேசித்துள்ள வனநிலத்தில் இயற்கையாக வளர்ந்த மரங்கள் வெட்டப்பட வேண்டுமெனில், இயற்கையாக வளர்ந்துள்ள மரத்தினை வெட்ட மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் ஆணை பெறப்பட வேண்டும்.

**இரண்டாம் நிலை ஒப்புதல் (Stage-II approval)**

முதல்நிலை ஒப்புதலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்து முழுமையான அறிக்கையினை பயனீட்டாளரிடமிருந்து பெற்று, மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட வேண்டும்.

பயனீட்டாளரால் தமிழ்நாடு கேம்பா திட்டத்தில் கட்டப்படும் தொகைகள் ஆய்வு செய்யப்பட்டு இரண்டாம் நிலை ஒப்புதல் மைய அரசால் வழங்கப்படுகிறது.

மாநில அரசால் மைய அரசு ஒப்புதல் குறித்து ஆணை வழங்கப்படுகிறது.

மாநில அரசின் ஒப்புதல் ஆணை கிடைக்கப் பெற்ற பின்னர் பயனீட்டாளர் வனநிலத்தில் பணி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறார்.

அரசு துறைகளால் வளர்ச்சிப் பணிகள் மற்றும் பாதுகாப்பு பணிகளுக்கு கோரப்படும் வனநிலம் 1 எக்டேருக்கு குறைவாக இருப்பின், மாநில அரசால் அனுமதி வழங்கப்படும்.

**தமிழ்நாடு வனச்சட்டம் 1882ன் கீழ் காப்புக்காடுகளாக அறிவிக்கை செய்யும் பிரிவுகள்.**

| பத்தி | பிரிவு | தலைப்பு | உள்ளடக்கம் |
|---|---|---|---|
| II காப்புக்காடு | 3 | காப்புக்காடாக அறிவித்தல் | மாநில அரசு தன் ஆளுகையின் கீழ் தனக்கு சொத்துரிமை உள்ள எந்த ஒரு நிலத்தையும் தமிழ்நாடு வனச்சட்டம் பிரிவு 4 முதல் 16 வரையிலான நடவடிக்கைகளின் மூலம் காப்புக்காடாக ஏற்படுத்தலாம். |
| | 4 | அரசினால் அறிவிக்கை செய்யப் படுதல் | ஒரு நிலத்தை காப்புக்காடாக ஏற்படுத்த திட்டமிட்டால் மாநில அரசிதழ் / மாவட்ட அரசிதழில் அரசால் கீழ்க்கண்ட விபரங்களுடன் அறிக்கை வெளியிடப்படும்.<br><br>அ) காப்புக்காடாக அறிவிக்கப்படவுள்ள வன நிலத்தின் இருப்பிடம் மற்றும் எல்லைகள் முடிந்த வரை கூறப்படும்.<br><br>ஆ) சம்பந்தப்பட்ட நிலத்தை காப்புக்காடாக மாற்ற திட்டம்<br><br>இ) உத்தேசக்காப்புக்காடு சம்பந்தப்பட்ட நிலத்தின் மீதான அல்லது அதிலுள்ள வனவிளை பொருட்கள் மீதான உரிமை கோரலை விசாரித்து தீர்மானிக்க வன நிர்ணய அலுவலர் (Forest Settlement Officer) நியமிக்கப்படுவது அதில் தெரிவிக்கப்படும். |
| | 5 | நீதிமன்றம் அனுமதிக்கக் கூடாத வழக்குகள் | பிரிவு 4ன் கீழ் அறிக்கை வெளியிட்ட தேதியிலிருந்து பிரிவு 16ன் கீழ் அறிக்கை வெளியிடும் தேதி வரை எந்த சிவில் நீதிமன்றமும் இந்த நிலத்தின் மீது நில உரிமை வன பொருள் மீது உரிமை கோரும் மனுவை |

| பத்தி | பிரிவு | தலைப்பு | உள்ளடக்கம் |
|---|---|---|---|
| | | | அனுமதிக்கக் கூடாது. |
| | 6 | வன நிர்ணய அலுவலர் அறிவிக்கை வெளியிடுதல் | பிரிவு 4ன் கீழ் மாவட்ட அரசிதழில் அறிக்கை வெளியிடப்பட்டவுடன் பிரிவு 6ன் கீழ் மாவட்ட அரசிதழில் அறிக்கை வன நிர்ணய அலுவலரால் வெளியிடப்பட வேண்டும். பின்னர் உத்தேசக் காப்புக்காடு அமைந்துள்ள மாவட்ட தலைமையிடத்திலும், தாலுக்கா தலைமையிடத்திலும், நிலத்தின் பக்கத்திலுள்ள ஒவ்வொரு நகரம் மற்றும் கிராமத்திலும் வன நிர்ணய அலுவலர் அறிவிப்பு வெளியிடுவார்.<br><br>அ. அந்த அறிவிப்பில் உத்தேச காப்புக்காட்டின் இருப்பிடம், கூடுமான வரை அதன் சரியான எல்லைகள் குறிப்பிடப்பட்டிருக்கும்.<br><br>ஆ. கீழே பிரிவு 7ல் உள்ள அம்சங்கள் கூறப்பட்டிருக்கும்.<br><br>இ. காப்புக்காடாக அறிவிக்கை செய்யப் படுவதால் ஏற்படும் பின் விளைவுகள் பற்றி விளக்கப்பட்டு இருக்கும்.<br><br>ஈ. உத்தேச காப்புக் காட்டில் நிலம் மற்றும் வன விளைபொருள் மீது கோரும் உரிமையை எழுத்து மூலம் நேரில் ஆஜராகி ஆதாரத்துடன் வன நிர்ணய அலவலரிடம் பிரிவு 6ன் கீழ் மாவட்ட அரசிதழில் அறிக்கை வெளியிட்ட மூன்று மாதத்திற்குள் அளிக்க வேண்டும்.<br><br>உத்தேச காப்புக்காடு நிலத்தில் அடங்கியுள்ள, அதை சுற்றியுள்ள நில உரிமையாளர்கள் அல்லது அனுபவதாரர்களை கண்டறிந்து அவர்களுக்கு இந்த அறிவிப்பு நகல் வன நிர்ணய அலுவலரால் சார்வு செய்யப்படும். வேறு மாவட்டத்தில் குடியிருந்தால் ஒப்புதலுடன் கூடிய பதிவு தபால் மூலம் அறிவிப்பை அனுப்பி வைக்கப்படும். |
| | 7 | புதிய உரிமை கோரலுக்கு தடை | பிரிவு 6ன் கீழ் வன நிர்ணய அலுவலர் அறிவிக்கை வெளியிட்டபின் பிரிவு 16ன் கீழ் அறிக்கை வெளியிடப்படும் தேதிக்கும் இடைப் பட்ட காலத்தில் உத்தேசக்காப்புக்காடு சம்பந்தப்பட்ட நிலம் மீது அரசு வழங்கும் உரிமை தவிர, யாருக்கு உரிமையுள்ளதோ அவர் எழுத்து மூலமாக மற்றவருக்கு செய்யும் உரிமை தவிர அல்லது வாரிசு முறையில் கிடைக்கும் உரிமை தவிர, வேறு நபர் எவரும் |

| பத்தி | பிரிவு | தலைப்பு | உள்ளடக்கம் |
|---|---|---|---|
| | | | உரிமை கோர முடியாது.<br><br>விவசாயம் அல்லது வேறு நோக்கத்திற்கு புதிதாக காடு அழிப்பு செய்யக்கூடாது. Board of Revenue அனுமதியின்றி பட்டா எதுவும் வழங்கக்கூடாது. அப்படி வழங்கினால் அது செல்லத்தக்கது அல்ல. வனப்பாதுகாப்புச் சட்டம் 1980 நடைமுறைக்கு வந்த பின்னர் Board of Revenue அனுமதி வழங்க மத்திய அரசின் முன் அனுமதி பெற வேண்டும். மேலும் வன நிர்ணய அலுவலரது எழுத்து மூல உத்தரவுடன் எந்த செயலை செய்வதையும் இந்த பிரிவு தடை செய்வதில்லை. |
| | **8** | வன உரிமை அலுவலரின் விசாரணை | பிரிவு **6**ன் கீழ் வன நிர்ணய அலுவலர் அறிவிக்கை வெளியிட்ட பின் மாவட்ட அரசிதழில் அறிவிப்பு வெளியிட்ட மூன்று மாதம் வரை அல்லது **90** நாட்கள் மட்டும் நிலத்தின் மீது கோரும் உரிமையை (Code of Civil Procedure) வன நிர்ணய அலுவலர் பதிவு செய்ய வேண்டும். அப்போது வன அலுவலரை வன நிர்ணய அலுவலர் உடன் வைத்துக் கொள்ள வேண்டும். வன அலுவலர் தெரிவிக்கும் ஆட்சேபங்களையும் அவர் ஆலோசித்து பதிவு செய்ய வேண்டும். |
| | **9** | வன நிலவரித்திட்ட அலுவலரின் அதிகாரம் | நிலத்தின் மீது உரிமை கோருவதை விசாரணை செய்ய வன நிர்ணய அலுவலருக்கு கீழ்க்கண்ட அதிகாரங்கள் உள்ளன.<br><br>அ. உரிமை கோரும் நிலத்தில் அவரோ அல்லது அவரது நியமன அலுவலரோ நுழையவும், சர்வே செய்யவும், எல்லையை குறிக்கவும், வரைபடம் வரையவும் அதிகாரம்.<br><br>ஆ. சாட்சிகளை வரவழைக்கவும் ஆதாரங்களை கோரவும் உரிமையியல் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம். |
| | **10** | நிலத்தை ஆக்கிரமித்தவர் உரிமை கோரல் | பாதை உரிமை, ஓடை உரிமை, நீர் உரிமை, மேய்ச்சல் உரிமை, வனப்பொருள் உரிமை தவிர உரிமை கோருபவரால் கேட்கும் நில உரிமை முழுவதுமாக அல்லது பகுதியாக அனுமதித்தோ, நிராகரித்தோ, வன நிர்ணய அலுவலரால் தீர்ப்பு வழங்கப்படும்.<br><br>**அவ்வாறான உரிமையை பகுதியாகவோ, முழுமையாகவோ அனுமதித்தால்** |

| பத்தி | பிரிவு | தலைப்பு | உள்ளடக்கம் |
|---|---|---|---|
| | | | 1. அந்த உரிமையை உரிமை கோருபவருக்கு ஒப்புவிக்க அவருடன் வன நிர்ணய தலைவர் உடன்பாடு செய்து கொள்ள வேண்டும்.<br><br>2. காப்புக்காடாக உத்தேசிக்கப்பட்டுள்ள எல்லையிலிருந்து உரிமை கோரும் நிலத்தை விதிப்படி விலக்களிக்கலாம்.<br><br>3. முக்கியமாக உரிமை கோருபவர் நிலம் காப்புக்காடாக மாற்ற தேவைப்படும் போது 1870ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ்கண்டவாறு கையகப்படுத்தி உத்தேசிக்கப்பட்ட காப்புக்காட்டில் சேர்த்து அறிவிப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br><br>**மறுக்கின்ற உரிமை மீது மேல் முறையீடு**<br><br>அது போன்ற உரிமையை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரித்தால், அந்த உத்தரவிலிருந்து 30 நாட்களுக்குள் நிராகரித்த உரிமை சம்மந்தமாக மட்டுமே, உரிமை கோருபவர் மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம். 30 நாட்களுக்குள் முறையீடு செய்யவில்லை என்றால் அதற்கு தகுந்த காரணத்துடன் அரசுக்கு கடிதம் எழுதி அரசு செயலாளர் நீட்டித்து உத்தரவு வழங்கினால் உரிமை கோருபவர் மேல்முறையீடு செய்யலாம்.<br><br>**1. வன அலுவலரால் மேல் முறையீடு:**<br><br>அதுபோன்று அனுமதிக்கப்பட்ட உரிமையினை எதிர்த்து மேல்முறையீட்டினை அரசு சார்பாக பிரிவு 4ன் படி நியமனம் செய்யப்பட்ட அலுவலரால் மேற்கொள்ளலாம். |
| | 11 | பாதை, நீரோடை, மேய்ச்சல் மற்றும் வன விளைபொருட்கள் மீதான உரிமை | பிரிவு 10ன் கீழ் காட்டில் பாதை, நீரோடை, மேய்ச்சல், வனப்பொருள் மீது உரிமை கோரலை அதன் மீது வன நிர்ணய அலுவலர் உத்தரவு வழங்குவார்.<br><br>அந்த உத்தரவில் என்ன உரிமை கேட்கப்படுகிறது. அதன் அளவும், அதன் மீது அனுமதிக்கப்படும் உரிமை போன்றவற்றை முழுமையாக அல்லது பகுதியாக அனுமதித்தோ அல்லது நிராகரித்தோ குறிப்பாக உத்தரவு வழங்கலாம். |

| பத்தி | பிரிவு | தலைப்பு | உள்ளடக்கம் |
|---|---|---|---|
| | | | உரிமை கோரலை ஏற்றுக் கொண்டால் நிலம், கட்டிடம் சம்மந்தப்பட்ட உரிமைகளை அனுபோகம் செய்ய நிலத்தின் பெயர், கட்டிடத்தின் பெயர், அவைகள் அமைவிடம், அவைகள் பரப்பு போன்றவற்றை வன நிர்ணய அலுவலரால் பதிவு செய்யப்படும். |
| | 12 | மேய்ச்சல் உரிமை அல்லது வன விளை பொருளுக்கான உரிமைகளை ஏற்றல் | வன சட்டம் பிரிவு 11 ன் படி மேய்ச்சல் உரிமை, வனப்பொருள் மீது உரிமையை வன நிர்ணய அலுவலர் வழங்கினால், அந்த உரிமையை அனுபவிக்க முடிந்த வரை கீழ்க்கண்ட நடவடிக்கைகளை அவர் மேற்கொள்ள வேண்டும்.<br><br>அ. உத்தேசிக்கப்பட்ட காப்புக்காட்டில் போதுமான பரப்புடைய நிலத்தை தகுதியான இடத்தில், முடிந்த வரை உரிமை கோருபவருக்கு வசதியான இடத்தில் வழங்கி உத்தேசிக்கப்பட்ட காப்புக்காட்டின் எல்லையை மாற்றலாம். |
| | 13 | மேய்ச்சல் உரிமையை அறிவித்தல் | மேற்கண்ட பிரிவின் கீழ் வழங்கப்படும் உத்தரவில் முடிந்த வரை செயல்முறைக்கு ஏற்றவாறு மேய்ச்சல் அனுமதிக்கும்போது, கால்நடைகளின் இனம், எண்ணிக்கை, வரையறுக்கப்பட்ட வட்டார வரம்பு, எந்த பருவத்தில் மேய்க்கலாம் என்பதை பதிவு செய்ய வேண்டும்.<br><br>மேலும் உத்தேசிக்கப்பட்ட காப்புக் காட்டில், ஒரிடத்தில் எந்த எல்லை வரை, எந்த பருவத்தில், எதன் மூலம், எந்த அளவில் தடி மரங்கள் அல்லது வனப்பொருள் உரிமை கோரியவரை எடுக்க அல்லது ஏற்க உரிமையுள்ளன என்பதை வன நிர்ணய அலுவலர் தெரிவிக்க வேண்டும். |
| | 14 | பிரிவு 11,12 மற்றும் 13 ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் மீது மேல் முறையீடு | பிரிவு 11,12,13 ஆகிய பிரிவுகளின்படி வன நிர்ணய அலவலர் தீர்ப்பு வழங்கிய தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் உரிமை கோருபவர் அல்லது வன அலுவலர், வன நிர்ணய அலுவலர் வழங்கிய தீர்ப்பு மீது மேல்முறையீடு செய்யலாம்.<br><br>வன நீதிமன்றம் அல்லது அத்தகைய நீதிமன்றம் அமைக்கவில்லை என்றால் வருவாய் துறையில் 12 ஆண்டுக்கு குறைவில்லாமல் பணியாற்றிய ஒருவர் அவர் |

| பத்தி | பிரிவு | தலைப்பு | உள்ளடக்கம் |
|---|---|---|---|
| | | | பெயரில் அவ்வப்போது அரசிதழ் மூலம் வன நிர்ணய அலுவலர் தீர்ப்புகள் மீது மறு தீர்ப்பு வழங்க அரசால் நியமிக்கப்படுவார். |
| | 15 | பிரிவு 14ன் கீழ் மேல் முறையீடு | பிரிவு 14ன் கீழ் செய்யும் மேல் முறையீடு எழுத்து மூலம் வன நிர்ணய அலவலரிடம் வழங்க வேண்டும். அவர் அதனை தாமதமின்றி மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். |
| | 16 | காப்புக்காடாக அறிவித்தல் | **அ. காப்புக்காடாக அறிவித்தல்**<br>பிரிவு 6–ன் கீழ் உரிமை பெற குறிப்பிட்ட காலமாகிய 90 நாட்கள் முடிந்த பின் 90 நாட்களுக்குள் உரிமை கேட்டவர்கள் மனு மீது வன நிர்ணய அலுவலர் தீர்ப்பு வழங்கிய பின்<br><br>ஆ. வன நிர்ணய அலுவலர் வழங்கிய தீர்ப்பின் மீது பிரிவு–10, 14–ல் மேல் முறையீடு செய்யும் காலமாகிய 60 நாட்கள் முடிந்த பின் அத்தகைய மேல்முறையீடுகளை மேல் முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்த பின்<br><br>இ. பிரிவு–10–ன் கீழ் அனைத்து நடவடிக்கைகள் முடிந்த பின், 1870 ஆம் ஆண்டு நில கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் கையகப்படுத்திய பின் காப்புக் காடாக பிரிவு–16ன் கீழ் அறிவிக்கை செய்ய வேண்டிய நிலத்தை வன நிர்ணய அலுவலர் 16ன் கீழ் காப்புக்காடாக்க அறிவிக்கை செய்ய உரிய கருத்துரு பிரேரணை, வன நிர்ணய அலுவலரால் மாவட்ட வன அலுவலருக்கு அனுப்பி வைக்கப்படும். அவர் அதனை பரிசீலனை செய்து மாவட்ட ஆட்சி தலைவருக்கு அனுப்புவார். மாவட்ட ஆட்சி தலைவரும் அதனை பரிசீலனை செய்து வனப்பாதுகாவலருக்கு அனுப்புவார் வனப்பாதுகாவலர் அதனை பரிசீலனை செய்து முதன்மை தலைமை வனப்பாதுகாவலருக்கு அனுப்பி வைப்பார். அவர் அதனை அரசுக்கு அனுப்புவார்.<br><br>காப்புக்காடாக அறிவிக்க உள்ள இடத்தின் எல்லைகளை குறிப்பிட்டு அரசு ஆணை வெளியிடும். அந்த அறிவிப்பு தமிழ்நாடு அரசிதழிலும் சம்மந்தப்பட்ட மாவட்ட அரசிதழிலும் காப்புக்காடாக அரசு வெளியிடும். அரசிதழில் குறிப்பிட்ட நாளில் இருந்து அந்த காப்புக்காடு அமலுக்கு வரும். |

| பத்தி | பிரிவு | தலைப்பு | உள்ளடக்கம் |
|---|---|---|---|
| | | | பிரிவு–16–ன் கீழ் அறிவிப்பு செய்தவாறு மேற்குறிப்பிட்ட தேதிக்கு முன் வன நிர்ணய அலுவலர் பிரிவு–16–(2) ன் கீழ் அறிவிப்பு வெளியிடுவார். அந்த குறிப்பிட்ட தேதியிலிருந்து அந்த காடு காப்புக்காடாக கருதப்படும். |
| III அரசு பொறுப்பில் உள்ள காப்புக்காடாக அறிவிக்கப்படாத நிலங்கள் | 26 | சட்டம் இயற்றும் அதிகாரம் | பிரிவு 26–ன் கீழ் மாவட்டத்தில் உள்ள எந்த ஒரு நிலத்தின் பயன் பாட்டினையும், மேய்ச்சலையும், இயற்கை வளங்களையும் உடனடியாக பாதுகாக்க அறிக்கை செய்யலாம். உதாரணமாக வனத்துறைக்கு வழங்கப்பட்ட ஈட்டு நிலம், வன நிலத்திற்கு வெளியே எழுப்பப்பட்ட வனத்தோட்டங்கள் போன்றவற்றை பிரிவு–4ன் கீழ் அறிவிக்கை செய்ய ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்க, அந்நிலங்களை உடனடியாக பாதுகாக்க அவசியம் ஏற்படும்போது பிரிவு–26–ன் கீழ் அறிக்கை செய்யப்பட வேண்டும். |

## 4. பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை

### 4.1. சரணாலயத்திற்குள் செல்ல கட்டுப்பாடு

வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972 பிரிவு 27–ன்படி ‘‘கீழே குறிப்பிடப் பட்டுள்ளவர்களைத் தவிர வேறு யாரும் பிரிவு 28–ன் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டில் கண்ட நிபந்தனைகளின்படி அல்லது வன உயிரின உய்விடப் பகுதிக்குள் நுழையவோ, வசிக்கவோ கூடாது.

அ) பணியில் ஈடுபட்டிருக்கும் பொது ஊழியர்

(ஆ) தலைமை வன உயிரினக்காப்பாளரால் அல்லது அங்கீகாரம் பெற்ற அலுவலரால் வன உயிரின உய்விடத்தின் எல்லைக்குள் வசிக்க அனுமதிக்கப்பட்டவர்.

(இ) வன உயிரின உய்விடப் பகுதியின் எல்லைக்குள் அசையாச் சொத்துக்கள் மீது உரிமை எதுவும் உள்ளவர்.

(ஈ) பொது நெடுஞ்சாலை வழியாக வன உயிரின உய்விடப் பகுதியின் ஊடே செல்பவர்.

(உ) மேற்கண்ட சட்டக்கூறுகள் (அ), (ஆ) அல்லது (இ)–ல் கண்டுள்ளவரைச் சார்ந்திருப்பவர்கள்’’.

**செய்யக்கூடியவை**

- ✓ வன உயிரினச் சரணாலயத்தினுள் இருக்கும் வரை ஒவ்வொருவரும் இச்சட்டத்திற்கு புறம்பான குற்றங்களை தடுக்க வேண்டும். இச்சட்டத்திற்கு புறம்பாக குற்றம் நடந்துள்ளதாக கருதுவதற்கு காரணம் இருப்பின், குற்றம் புரிந்தவரை கண்டுபிடிக்கவும் மற்றும் கைது செய்யவும் உதவி புரிதல் வேண்டும்.

- ✓ வனவிலங்கு ஏதேனும் இறந்திருந்தால் அது குறித்த தகவலை தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும் உயர் அலுவலருக்கு தெரியப் படுத்துவதும், அவர் வரும் வரை இறந்த வன விலங்கினை பாதுகாக்கவும் வேண்டும்.

- ✓ சரணாலயம் மற்றும் சரணாலயத்திற்கு அருகில் தீ விபத்து ஏதேனும் ஏற்படின், தன்னால் முடிந்தவரை தீயை அணைக்கவும், தீ பரவாமல் தடுக்கவும் முற்படவேண்டும்.

**செய்யக்கூடாதவை**

- ✕ எந்தவொரு நபரும் வனவிலங்கினை துன்புறுத்தவோ அல்லது சரணாலயத்திற்கு சேதம் விளைவிக்கவோ கூடாது.

- ✕ சரணாலயத்தினுள் எந்தவொரு நபரும் வன உயிரினத்தையோ அல்லது வனத்தையோ அழிக்கக்கூடாது.

- ✕ சரணாயலத்தினுள் தீ வைக்கவோ, தீப்பற்றி எறியும் போது தூண்டவோ அல்லது தீப்பற்றி எறியும் போது விட்டுவிட்டுச் செல்லவோ எந்தவொரு நபரும் அனுமதிக்கப் படமாட்டார்.

- ✕ தலைமை வன உயிரினக் காப்பாளரின் முன் அனுமதியின்றி எந்தவொரு நபரும் ஆயுதங்களை எடுத்துச் செல்லக் கூடாது.

- ✕ வன உயிரினங்களுக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய இரசாயன பொருட்களையோ அல்லது வெடிமருந்துகளையோ உபயோகிக்க அனுமதி கிடையாது.

- ✕ சரணாலயத்திற்குள் மேய்ச்சலுக்கு அனுமதி கிடையாது.

- ✕ வன உயிரின வாழ்விடங்களில் புகைப்பிடித்தல், மது அருந்துதல், பிளாஸ்டிக் மற்றும் குப்பை கொட்டுதல் கூடாது.

**4.2. போக்குவரத்து அனுமதி**

- ❖ தமிழ்நாடு வன உயிரின (இடமாறுபாடு) சட்டம், 1991, மற்றும் அரசாணை எண்.447, சுற்றுப்புறம் மற்றும் வனத்(வனம்–5)துறை, நாள் 19.07.91ன் படி எந்தவொரு நபரும் எந்தவொரு வன உயிரினம் அல்லது வன உயிரினப்பொருட்களை தலைமை வன உயிரினக் காப்பாளர் அல்லது அதிகாரம் பெற்ற உயர் அலுவலரின் முன் அனுமதியின்றி மாநிலத்திற்குள்ளோ அல்லது வெளி மாநிலத்திற்கோ கொண்டு செல்லக்கூடாது.

- ❖ விண்ணப்பதாரர் வன உயிரினத்தை எங்கிருந்து எங்கு கொண்டு செல்கிறார், கொண்டு செல்லும் நாள், கொண்டு செல்லும் வழி போன்றவற்றைக் குறிப்பிட்ட விண்ணப்பத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

- ❖ விண்ணப்பதாரரின் நம்பகத்தன்மை திருப்தி அளிக்கக்கூடியதாக இருந்தால் தலைமை வன உயிரினக் காப்பாளர் அந்த வன விலங்கினை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கொண்டு செல்ல அனுமதிக்கலாம்.

- ❖ அரசாணை எண்.133, சுற்றுப்புறம் மற்றும் வனத்(வனம்–5) துறை, நாள் 23.07.2003இன் படி யானைகளுக்கு ரூ.300/–ம், பிற அட்டவணை–Iன் கீழ் வரும் விலங்கினங்களுக்கு ரூ.100/–ம் போக்குவரத்துக் கட்டணமாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

**5. வெளிப்படையான செயல்பாடு**

**தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005**

ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் தவிர்த்து நாடு முழுவதும் உள்ள பொது அலுவலர்கள் பொறுப்பில் இருக்கும் தகவல்களை பெறுவதற்கான அடிப்படை உரிமையை குடிமக்கள் பெறும்பொருட்டு பாராளுமன்றத்தில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டது. ஊழலைக் கட்டுப்படுத்த, அதிகாரம் பெற்ற அலுவலர்களின் செயல்பாடுகளில் ஒரு வெளிப்படையான நிலையை கொண்டுவந்து, அரசும், அரசின் அங்கங்களும் பொதுமக்களுக்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பை இச்சட்டம் தந்துள்ளது. இச்சட்டத்தின் படி, பொதுமக்களுக்கு நடைமுறையில் உள்ள தகவல்களை வழங்கவும், கோரிக்கையின் அடிப்படையில் தகவல்களை வழங்கவும் அலுவலகங்கள் கடமைப் பட்டுள்ளன. இச்சட்டம் போதிய காரணமின்றி பொது

அதிகாரிகள் வழங்க மறுக்கும் தகவல்கள் குறித்த புகார்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள இருநிலை மேல்முறையீடு வழிமுறைகளை வழங்குகிறது. இச்சட்டம் 1923 ஆம் ஆண்டைய அலுவலக ரகசிய சட்டம், பிற சட்டங்கள் மற்றும் அரசு ஆணைகளின் படி பொதுமக்களுக்கு தகவல் வழங்குவதில் உள்ள கட்டுப்பாட்டினை நீக்கும் அதிகாரம் படைத்தது.

வனத்துறையில் கீழ்க்கண்டவாறு பொது தகவல் அலுவலர்கள் / மேல்முறையீட்டு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

| பதவி | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம் | கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம் / தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம் / வனப்பாதுகாவலர் அலுவலகம் | மாவட்ட வன அலுவலகம் / வன உயிரினக் காப்பாளர் அலுவலகம் |
|---|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் | இணை இயக்குநர் | கண்காணிப்பாளர் | கண்காணிப்பாளர் |
| மேல்முறையீட்டு அலுவலர் | வனப்பாதுகாவலர் (வன விரிவாக்கம் மற்றும் விளம்பரம்) | சம்மந்தப்பட்ட கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் / தலைமை வனப்பாதுகாவலர் / வனப்பாதுகாவலர் | சம்மந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் / வன உயிரினக் காப்பாளர் |

**கால வரையறை : பிரிவு – 7**

- விண்ணப்பம் அளித்த நாளிலிருந்து – 30 நாட்கள்.
- ஒரு தனிநபரின் வாழ்க்கை மற்றும் சுதந்திரம் குறித்த தகவல் எனில்– 48 மணி நேரம்.
- கட்டணத்தை கணக்கீடு செய்யும் காலம் மற்றும் விண்ணப்பதாரருக்கு தெரியப் படுத்துதல் 30 நாட்கள் கால அளவிலிருந்து நீக்கப்படும்.

**கட்டணம்**

இச்சட்டத்தின் 7–ஆவது பிரிவு உட்பிரிவு (1)ன் படி, தகவல் வழங்க கட்டணம் உரிய ரசீதுகள் அல்லது கேட்போர் காசோலை அல்லது வங்கிக்காசோலையின் மூலம் வசூலிக்கப்பட்டு, பொது அலுவலர் நிர்ணயிக்கும் பின்வரும் விலைவிகிதங்களில் உரிய கணக்குத்தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும்.

- அச்சடிக்கப்பட்ட அல்லது நகல் எடுக்கப்பட்ட ஒரு பக்கத்திற்கு ரூ. 2 வீதம் (A4 அல்லது A3 அளவு தாள்) ;
- பெரிய அளவு தாளில் எடுக்கப்பட்ட நகலுக்கு உள்ள படியான விலை ;
- மாதிரிகளுக்கான உள்ளபடியான விலை ;
- ஆவணங்களை ஆய்வு செய்ய முதல் ஒரு மணிநேரத்திற்கு கட்டணம் ஒன்றுமில்லை மற்றும் அதற்குப்பின் ஒவ்வொரு ஒரு மணி நேரத்திற்கும் ரூ.5 கட்டணமாக வசூலிக்கப்படும்.

இச்சட்டத்தின் 7—ஆவது பிரிவு உட்பிரிவு (5)ன் படி, தகவல் வழங்க கட்டணம் உரிய ரசீதுகள் அல்லது கேட்போர் காசோலை அல்லது வங்கிக் காசோலையின் மூலம் வசூலிக்கப்பட்டு, பொது அலுவலர் நிர்ணயிக்கும் பின்வரும் விலைவிகிதங்களில் உரிய கணக்குத்தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும்.

- தகவல்களை பிளாப்பியில் வழங்க பிளாப்பிக்கு ரூ.5 வீதம் ;
- தகவல்களை அச்சடிக்கப்பட்ட வடிவில் வழங்க வெளியீட்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட விலை.

**திட்ட செயல்பாடுகளுக்கு விளம்பரம்**

திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்து பகுதிகளில் திட்ட மதிப்பீடு, திட்ட முன்னேற்றம் போன்ற விவரங்களை தெரிவிக்கும் விளம்பர பலகைகள் எழுப்பப்படுகின்றன.

**நேரடி பொது ஏலம்**

தடிமரம், சிறுவனப்பொருட்கள், விறகு மரம், சந்தனமரம் போன்றவைகளின் விற்பனைக்கு பொதுஏலம் மூலம் நடத்தப்பட்டு அனைத்து வகைகளிலும் வெளிப்படையான நடவடிக்கை கடைபிடிக்கப்படுகிறது.

**6. குறை தீர்க்கும் செயல்முறை**

**குறை தீர்க்கும் நாள்**

பொது மக்களின் குறைகளைத் தீர்க்க வனத்துறையில் கீழ்க்கண்ட நாட்களில் குறை தீர்க்கும் நாள் நடத்தப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | வனச்சரக அலுவலகம் | – | 15 நாட்களுக்கு ஒரு முறை |
| 2. | மாவட்ட வன அலுவலகம் | – | மாதம் ஒரு முறை |
| 3. | தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம் | – | இரண்டு மாதத்திற்கு ஒரு முறை |
| 4. | தலைமை அலுவலகம்,<br>இணை இயக்குநர், | – | நூலகம், ஒன்பதாவது தளம்.<br>பிரதி மாதம் முதல் வெள்ளிக்கிழமை |

| | |
|---|---|
| முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம், சென்னை | மாலை 3.00 மணி முதல் 5.45 வரை |

**குறை தீர்க்கும் பிரிவு**

குறைகளைத் தீர்ப்பதற்கென குறைதீர்க்கும் பிரிவு மாவட்ட / மண்டல / தலைமை அலுவலக அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**முதலமைச்சரின் தனிப்பிரிவு புகார் மனுக்கள்**

முதலமைச்சரின் தனிப்பிரிவிலிருந்து பெறப்படும் புகார்மனுக்கள்/ குறைகள் மீது தலைமை அலுவலகத்தில் உள்ள தலைமை வனப்பாதுகாவலர், மனித வள மேம்பாடு தொடர் நடவடிக்கை எடுத்து ஆய்வு செய்கிறார். தலைமை வனப்பாதுகாவலர், மனித வள மேம்பாடு முதலமைச்சரின் தனிப்பிரிவு புகார் மனுக்கள் குறித்த செயல்பாட்டிற்கு ஒருங்கிணைப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**பாலியல் வன்முறை தடுப்புக்குழு**

பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் வன்முறை (தவிர்ப்பு, தடுப்பு மற்றும் குறைப்பு) சட்டம், 2013 பிரிவு 4ன் படி உள்புகார்கள் குழு என அழைக்கப்படும் குழு ஒன்று பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | : | | மித்தா பானர்ஜி, இவப.,<br>கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (தகவல் தொழில்நுட்பம்) |
| உறுப்பினர்கள் | : | i) | திருமதி. சி. கஸ்தூரி,<br>நேர்முக உதவியாளர் (பணி),<br>முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம்,<br>சென்னை |
| | | ii) | திருமதி. அ. திரிபுரசுந்தரி,<br>கண்காணிப்பாளர்,<br>முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம்,<br>சென்னை |
| அரசு சாரா நிறுவன / சங்க உறுப்பினர் | : | | முனைவர் ஆர். சுஜாதா,<br>பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி நிபுணர்,<br>கருப்பா தொழில்நுட்ப வளர்ச்சி முயற்சிகள் |

இக்குழு பணியிடத்தில் பெண்கள் பாலியல் வன்முறை குறித்த புகார்களை சட்டவிதிகளுக்குட்பட்டு விசாரணை செய்து கண்டறிந்து உண்மைகள் / பரிந்துரைகள் குறித்த அறிக்கையினை தயார் செய்து முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத்தலைமை) அவர்களுக்கு அளிக்கும்.

**7. வனத்துறை இணையதளம்**

வனத்துறை தொடர்பான தகவல்களை வனத்துறைக்கென அமைக்கப்பட்டுள்ள https://www.forests.tn.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

**திண்டுக்கல் சி.சீனிவாசன்**
**வனத்துறை அமைச்சர்**